உ

அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை!

அருட்பெருஞ்சோதி
அருட்பெருஞ்சோதி

# வள்ளற்பெருமான் வரலாறு கொள்கைகள், பாடல்கள்



அன்பளிப்பு :

கேப்டன் மு. இராமசாமி, திருவாரூர்.

**பெரம்பலூர் மாவட்ட சன்மார்க்க சங்கம்,**

ஸ்ரீ இராமலிங்க சோதி நிலையம், பெரம்பலூர்.

# I. மூன்றாம் பதிப்பு முன்னுரை

மாணாக்கப் பருவத்திலிருந்தே சன்மார்க்கத்தைக் கடைப்பிடித் தொழுக வேண்டி, இந்நூல் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு, அவர்கள் தேர்ச்சியடையும் பொருட்டு, கட்டுரைப் போட்டி, வினா-விடைப் போட்டி, பாட்டுப் போட்டி வைத்து அனைவருக்கும் பரிசளிக்கப்படுகிறது.

இப்பொழுது இந்நூல் மூன்றாம் பதிப்பாக வெளிவருகிறது. இச் சீரிய பணிக்கு நன்கொடையளித்து ஊக்கமளித்த **கேப்டன் மு. இராமசாமி** அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

03.06.90 அன்று நிறுவனர், திரு. கு. திருவேங்கடம் அவர்களின் நூற்றாண்டு விழாவின் போது இறைவனடி சேர்ந்த சங்கத் தலைவர் திரு. கு. அங்கமுத்து அவர்களுக்குப் பிறகு சங்கத்தின் தலைமைப் பொறுப்பை வழக்கறிஞரும் ஆன்மநேயருமான திரு. S.N. பிரசன்னம், B.A., B.L., அவர்கள் ஏற்று சங்கத்தினைச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

ஸ்ரீ இராமலிங்க ஜோதி நிலையத்தில் ஆண்டுதோறும் ஆண்டு விழாவும், சன்மார்க்க எழுச்சி விழா மற்றும் இலக்கிய ஆன்மிக நிகழ்ச்சிகளும் நடந்து வருகின்றன. ஆண்டு விழாவின் போது குழந்தைகளுக்கு அருட்பா போட்டிகள் வைத்துப் பரிசளிக்கப்படுகிறது. சமூக சேவையாக ஏழைப் பெண் ஒருவருக்கு தையல் மிஷினும், ஒருவருக்கு சேலையும் வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ இராமலிங்க ஜோதி நிலையத்தின் சார்பில் வள்ளலார் நர்சரி பள்ளி ஒன்று இயங்கிவருகிறது. குழந்தைகளுக்கு அருட்பா பாடல்கள் கற்றுத் தரப்படுகின்றன.

மாவட்ட சன்மார்க்க சங்கம் பல கிராம சங்கங்களைக் கொண்டு இயங்கி வருகிறது. வடலூர் தலைமைச் சங்கத்தோடும், திருச்சி மாவட்ட சங்கத்தோடும் இணைந்து செயல்பட்டு வருகிறது.

இன்னும் சிறப்பாகச் செயல்பட பெரியோர்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் பெரிதும் வேண்டப்படுகிறது.

இங்ஙனம்,

**S.N. பிரசன்னம்,** B.A., B.L.,
தலைவர், பெரம்பலூர் மாவட்ட
சன்மார்க்க சங்கம்.

அருள்ஜோதி. **கோபால்சாமி,**
பொதுச் செயலாளர் & பொறுப்பாளர்,
ஸ்ரீ இராமலிங்க ஜோதி நிலையம்.

## வள்ளலாரின் வரலாற்றுக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | இராமலிங்கம் |
| சிறப்புப் பெயர் | : | திருஅருட்பிரகாச வள்ளலார் |
| பிறப்பு | : | 05.10.1823 |
| பிறந்த ஊர் | : | மருதூர், வடலூரிலிருந்து 10 கி.மீ. |
| தந்தையார் | : | இராமையா பிள்ளை |
| தாயார் | : | சின்னம்மையார் - ஆறாவது மனைவி |
| உடன் பிறந்தோர் | : | சபாபதி பிள்ளை, பரசுராம் பிள்ளை, சுந்தரம் அம்மையார், உண்ணாமுலை அம்மையார். |
| திருமணம் | : | தம் சகோதரி உண்ணாமுலை அம்மையாரின் திருமகளார் தனம்மாளை மணந்தார் |
| வாழ்ந்த காலம் | : | 1823 - 1874 |
| சித்தி பெற்றது | : | 30.01.1874 ஸ்ரீ முக - தை - 19 வெள்ளி |
| வாழ்ந்த இடங்கள் | : | சென்னை 1825 - 1858<br>கருங்குழி 1858 - 1867<br>வடலூர் 1867 - 1870<br>மேட்டுக்குப்பம் 1870 - 1874 |
| நிறுவிய நிலையங்கள்: | | சன்மார்க்க சங்கம் 1865<br>சத்திய தருமச் சாலை 1867<br>சித்தி வளாகம் 1870<br>சத்திய ஞானசபை 1872 |
| யாத்த நூல் | : | திரு அருட்பா |
| பெற்ற பேறு | : | மரணமிலாப் பெருவாழ்வு |

ஸ்டூடன்ஸ் ஆப்செட், நாகை. ☎ 240250